# சோ.தர்மன் படைப்புகளில் தூர்வை நாவல் காட்டும் வேளாண்மக்களின் வாழ்வியல்

***ச. கண்ணகி***
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), பதிவு எண் : MKU21PFOL9987
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை
(மதுரைக் காமராசர் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது)

***முனைவர் க. லதா***
தமிழ்துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5039

*வேளாண்மையை முழுமுதற் தொழிலாகச் செய்து வாழும் வேளாண் பெருங்குடி மக்கள் இயற்கையைச் சார்ந்த வாழ்வியலைக் கொண்டவர்கள். இயற்கையிடம் வாழ்வாதாரங்களைப் பெற்று வாழும் வாழ்வியல் முறையைக் கொண்டவர்கள். கரிசல் வட்டார எழுத்தாளரான சோ.தர்மன் தன்னுடைய படைப்புகள் யாவற்றிலும் தான் பிறந்து வாழ்ந்த நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்வதில் அக்கறை காட்டி வருபவர். வேளாண்மையோடு இணைந்த தன்னுடைய தலைமுறைக் கதைகளை அடுத்தத் தலைமுறைக்கு இட்டுக் கொண்டிருக்கும் சிறந்த படைப்பாளி சோ.தர்மன் ஆவார். அவருடைய முதல் நாவல் தூர்வை ஆகும். இயற்கை வேளாண்மை செய்து வந்த நம் முன்னோர்களின் வாழ்வியல் பதிவுகலை உள்ளடக்கியதாக தூர்வை நாவல் விளங்குகின்றது. மண்ணை மட்டுமே சார்ந்து வாழ்ந்த வேளாண் சம்சாரிகளான மினுத்தானும், மாடத்தியும் நாவலின் முக்கியக் கதாப்பாத்திரங்கள் ஆவர். இயற்கையை நம்பி விவசாயம் செய்கின்ற பொழுது மழை இல்லாமல் விவசாயம் எப்படி அழிவுப்பாதைக்கு திரும்பியது என்பதை இந்நாவல் வழி உணரமுடிகின்றது. விவசாயம் இந்தியாவின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதைச் செய்யும் விவசாயிக்கு முதுகெலும்பு நிமிர்ந்துள்ளதா என்ற வினா நாவலின் வழி எழுப்பப்படுகிறது. இந்நாவலின் கதைக்கருவானது சோ.தர்மன் அவர்களுடைய சொந்த அனுபவம் என்று விளங்குகிறது. சூழலியலையும், வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பும், உதவுதல் பண்பும், விருந்தோம்பல் திறமும், மனிதர்களை மதிக்கும் பாங்கும், சிறுதெய்வங்களுடனான தொடர்பும் என்ற நிலைப்பாட்டில் தூர்வை நாவலிலிருந்து சில உதாரணங்கள் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாக அமைகிறது.*

சமகால எழுத்தாளர்களில் சோ தர்மன் அவர்கள் குறிப்பிடத்தக்க படைப்பாளியாகக் கருதப்படுகிறார். இதுவரை நான்கு நாவல்களையும், எழுபத்து எட்டு சிறுகதைகளையும் எழுதியுள்ளார். சூல் என்னும் நாவலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர். இந்த உலகம் கதைகளால் ஆனது என்று கூறி ஆனந்தப்படும் முழு நேர எழுத்தாளர் சோ.தர்மன் ஆவார். தனது அனைத்துப் படைப்புகளிலும் தான் பிறந்த உருளைக்குடி கிராமத்தைச் சுற்றிச் சுற்றிப் படம் எடுக்கும் தொழில்நுட்பக் கலைஞர் இவர். மண்ணையும் மனிதத்தையும் சரிவர நிறுத்தும் நிலுவையாளர் சோ.தர்மன். இவருடைய முதல் நாவல் "தூர்வை" (1996). 1990 முதல் 1996 வரையிலான இவருடைய தரவுத்திரட்டலின் விளைவாக உருவான நாவல் தூர்வை ஆகும். இவருடைய இரண்டாவது நாவல் 2005 ஆம் ஆண்டு வெளிவந்த "கூகை" எனும் நாவல். மூன்றாவது நாவல் 2016ல் வெளிவந்த "சூல்" என்பதாகும். பின் 2020ல் "பதிமூனாவது மையவாடி" என்னும் நாவலையும் இந்தக் கரிசல் வட்டாரப் படைப்பாளி ஆக்கி அளித்துள்ளார்.

தூர்வை என்னும் பெயருக்கான பொருள் யாதெனில் இல்லாது போன, மறைந்து போன என்பதாகும். இந்நாவல் விவசாயத்தின் சரிவைச் சுட்டிக்காட்டுகிறது. செழுமையான தலித்திய நாவலாகக் கருதப்படுகிறது. இன்னல்கள் படும் சாதிய இழிவையோ, உழைப்புச் சுரண்டலையோ, தலித்திய ஏற்றத்தாழ்வையோ இந்நாவல் சுட்டவில்லை. மாறாக, செழிப்பான தலித்திய மினுத்தான் என்னும் சம்சாரியின் வாழ்வியலை இந்நாவல் சுட்டுகிறது.

இந்நாவலின் வழி வேளாண்மையின் சூழ்நிலையும் இறங்குமுகமான விவசாயத்திற்கு விவசாயத்திற்கான காரணங்களும் விளக்கப்படுகின்றன. உருளைக்குடி கிராமத்தில் பண்ணையாருக்கு நிகரான சாம்சாரியாக மினுத்தான் என்னும் கதாப்பாத்திரம் நாவல் முழுமையும் பயணிக்கிறார். இவர் விவசாய நுட்பம் அறிந்த உழைப்பாளி ஆவார். புறசாதி சமூகத்தினர் மதிப்புடன் நடத்தும் அளவிற்கு நிலபுலன்கள் கொண்டவர், நேர்மையானவர். மினுத்தான் மீது சாதிய இழிவோ அடக்குமுறையோ நிகழ்த்தப் படவில்லை. இது சூழலியலைச் சித்தரிக்கும் நாவலாக விளங்குகின்றது. இந்நாவலில் இரண்டு விதமான சூழலியல் பிரச்சினைகள் பார்க்கப்படுகின்றன. நிலத்தின் மீது நிகழ்த்தப்படும் சூழலியல், மற்றொன்று நீர் பங்கீட்டின் சமமற்ற தன்மை. இவ்விரு பிரச்சினைகள் கரிசல் வட்டார மண்ணுக்கு மட்டுமல்ல தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் பொதுச்சிக்கலாக உள்ளது. நிலங்கள் மாறும் வடிவம் வெவ்வேறாயினும் அதன் பொதுவானது விவசாயச் சீரழிவாக அமைகிறது. அது தொழில் மையச் சமூகத்தின் கோரப்பிடிக்கு ஆளாகும் நிலையை தூர்வை நாவல் விளக்குகிறது. நெல் பயிரிட்ட நிலம் கருவேல மரங்களின் இடமாகியது பற்றி விவரித்த காட்சிகள் மனதில் முட்களாகப் பதிகிறது.

கரிசல் மண் நிலம் தீப்பெட்டி தொழிற்சாலைகளாகவும், சாக்குத் தயாரிக்கும் கம்பெனிகளாக உருமாறிப்போனதற்கான காரணங்களாக மழை குறைவும் அதனால் உண்டான நீர்ப்பற்றாக்குறையும், விவசாய விளைப் பொருட்களின் விலை குறைந்ததும் செலவினங்கள் அதிகரித்துமே காரணமென்று விளக்கப்படுகிறது.

ஆதிப்பொதுவுடைமைச் சமூகம் விவரிக்கும் பெண்களின் பங்களிப்பு போலவே இந்நாவலில் மாடத்தி முத்தம்மாள், தீர்த்தாப்பட்டி பாப்பா போன்ற கதாப்பாத்திரங்கள் ஆண், பெண் சமத்துவத்தை நிலைநாட்டுகிறது. மொத்தமாக 238 பக்கங்களைக் கொண்ட இந்த நாவல் அதிகம் விவரிப்பது வேளாண் மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் பொருளாதார சிக்கல்களையும், வேளாண் தொழிலை செய்யும் சம்சாரிகளின்

பண்புநலன்களையும் ஆகும். மாடத்தியும் மினுத்தானும் ஜாதகம் பார்ப்பதற்காக ஐயர் வீட்டிற்குச் செல்கிறார்கள். ஓட்டகங்கள் இரண்டும் கழுத்து மணிகளின் சல்சல் என்னும் ஓசையுடன் அவர்களை சுமந்து செல்கிறது. தன்னுடைய நிலத்தில் விளைந்த மிளகாய் வத்தல், உளுந்து, பாசிப்பயறு, பூசணிக்காய் போன்றவற்றை நட்பின் அடையாளமாகக் கொண்டு சென்றனர். இங்கேசாதியத்தின்சூழல்விளக்கப்படவில்லை. ஒரு வகைச் சுமுகமான உறவுமுறை விவரிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய நிலத்தில் விளையும் காய்கறிகளையும், தானியங்களையும் அள்ளிக் கொடுக்கின்ற மனம் படைத்தவர்களாக விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றளவும் இருந்து கொண்டுள்ளமையைப் பார்க்க முடிகின்றது. மினுத்தானும் மாடத்தியும் ஜாதகம் பார்த்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருக்கும் போது சோர்வுடன் இருக்கிறார்கள். ஜாதகத்தில் நேரம் சரியாக இல்லை என்று ஐயர் கூறிய வார்த்தைகள் அவர்களை மௌனமாக்கியது. அப்போது மினுத்தான் வண்டியை நிறுத்தச் சொல்லி விட்டு இறங்கி வேகமாக ஆற்றுக்குள் ஜாதகத்தைத் தூக்கி வீசி எறிகிறார். ஜாதகம் புது வெள்ளத்தில் மிதந்து மறைந்தது. கிராமங்களில் நம்பிக்கை சார்ந்த வாழ்வியல் முறையாக இருந்து வரும் வேளாண் மக்களின் வாழ்க்கையில் ஜாதகம் பார்த்தல் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக இப்பொழுதும் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. ஆனால் அந்த நம்பிக்கையிலிருந்து வெளிவரவும் அவர்கள் தயங்கியது இல்லை. அவர்களுடைய வாழ்வில் அனைத்து ஏற்ற இறக்கங்களையும் இயல்பாக ஏற்றுக் கொள்ளும் மனத்திட்பத்தை வேளாண் சார்ந்த வாழ்க்கை அவர்களுக்குக் கற்றுத் தந்துள்ளது என்பதை நாவல் நமக்கு விளக்குகிறது.

மாடத்தி பனையேறியிடம் பேசும் போது, “ஊருக்கு வந்தா வத்தமல்லி வச்சிருக்கேன். வாங்கிட்டுப் போயிரும் பிறகு யாருக்காச்சும் பெரிய மனுசன் தூக்கி குடுத்துடுவான். என்னைய சபைக்கப்படாது” என்று கூறும் நிலைப்பாட்டில் சாதிய ஒற்றுமை உணர்வு இருந்துள்ளமையை தூர்வை நாவல் காட்டுகிறது. உரலில் குதிரவாலி குத்த வந்த பெண்களிடம் வாஞ்சையுடன் நலம் விசாரித்து, அவர்களின் ஏழ்மையை உணர்ந்து கொள்ளும் மாடத்தி, அவர்கள் திரும்பிச் செல்லும் போது பயிறும், வத்தலும் கொடுத்து அனுப்புகிறாள். இந்நாவலில் பெரும்பான்மையான இடங்களில் வேளாண் மக்களின் இளகிய மனமும் அள்ளிக் கொடுக்கும் குணமும் வெளிப்படுகிறது. மேலும் இயற்கையை நன்கு உணர்ந்தவர்களாக, சுற்றுப்புறச் சூழலைத் தெள்ளந் தெளிந்தவர்களாக வேளாண்மை செய்யும் மக்கள் இருப்பதை நாவல் பல்வேறு நிலைகளில் சுட்டிக்காட்டுகிறது. வெள்ளையனும் பப்பனும் மீன் பிடிக்கக் கண்மாயிக்குச் செல்கிறார்கள். மீன் ஒன்றுகூடப் பிடிபடவில்லை. “இன்னியும் மழைக்கு அதிகாரம் இருக்கும் போலருக்கு அதுதான் ஒன்னு போல சொல்லி வச்சது மாதிரி ஒரு மீன்கூடப் படலையே. மருந்துக்குக் கூட கடிக்கமாட்டேங்குதே. மீனாச வீணாசன்னு சும்மாவ சொன்னான்” என்று பேசிக்கொள்கிறார்கள். இன்றைக்கு வானிலை அறிக்கைகள் தரும் மழை குறித்த செய்தியை இயற்கையை ஊன்றிப்பார்த்து வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள் எளிதில் கணித்து வருகிறார்கள்.

சிறு தெய்வங்களின் கதைகளோடு நேரடித் தொடர்பில் இருக்கும் கதாப்பாத்திரங்கள் வேளாண் மக்கள் ஆவார்கள். ஒரு நாள் பெய்த பேய் மழையில் கம்மாய் நிறைந்து நிறைப் பெருக்காக ஆனது. நீர்ப்பாய்ச்சி கருப்பசாமி கையில் அறிக்கேன்லைட்டும், மண்வெட்டியும் எடுத்துக் கொண்டு

ஒற்றை ஆளாக கம்மாய் கரையைச் சுற்றிச் சுற்றி வருகிறார். விடாத மழையில் கம்மாய் தண்ணி கரையத்தத்தி விழுகிற அளவுக்கு வந்து விடுகிறது. கம்மாயையும் காப்பாற்ற வேண்டும், ஊர் மக்களையும் காப்பாற்றியாக வேண்டும் என்கின்ற பொறுப்பை எப்போதும் உணர்ந்து பணியாற்றும் நீர்ப்பாய்ச்சி கருப்பசாமிக்கு, அரிக்கேன்லைட்டையும், மண்வெட்டியையும் தூக்கி வீசி எறிந்து விட்டு அய்யனார் கோவிலில் நெடுஞ்சானாக விழுந்து அழுது புரண்டு வேண்டுகிறார். அப்போது சலங்கைச் சத்தமும், மணிகள் எழுப்பும் சல்சல்லென்ற ஓசையோடு சேர்ந்து "டேய், யாருடா நிய்யா" என்ற சத்தமும் கேட்கின்றது. நீர்ப்பாய்ச்சி கருப்பசாமி எழுந்து நிற்கின்றார். "தலையில் ஊசிக் குல்லா இடுப்பில் கால்வரை தொங்கும் கருங்கச்சை கையில் வல்லயக் கம்புடன்" ஒரு உருவம் "கம்மாய சுத்திப் பாத்தயாட" என்ற கேள்வியைக் கேட்கின்றது. அப்போது கம்மாயைக் கண்காணிக்கும் கங்காணியான நீர்ப்பாய்ச்சி கருப்பசாமி "எனக்கென்ன சாமி தெரியும் கம்மாயவும், ஊரவும் நிய் தாஞ்சாமி காப்பாத்திக் குடுக்கணும்", என்று வேண்டி நிற்கின்றார். அதற்கு அய்யனார், "போ போயி ஆட்கள கூட்டிட்டு ஓடியா நீ வார வரைக்கு தண்ணி பன ஒசரம் போனாலும் கவலப்படாத நான் பாத்துக்கிறேன், ஓடடா ஊருக்கு" என்று சொல்கிறார். நீய் வார வரைக்கும் தண்ணீர் பனைமர உயரத்துக்கு வந்தாலும் நீ கவலைப்படாதே, நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அய்யனார் சாமி கூறிய வார்த்தையை வாக்காக ஏற்றுக்கெண்ட நீர்ப்பாய்ச்சி கருப்பசாமி, தான் ஊருக்குச் சென்ற பின் அய்யனார் சாமி கெடுத்த வாக்கை காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் கம்மாய்க்கு திரும்பாமல் ஊரிலேயே தங்கிவிடுகிறார் அதனாலேயே உருளைக் குடி கண்மாயை இன்று வரைக்கும் அய்யனார் சாமி காத்து வருவதாக ஊர் மக்கள் நம்புகிறார்கள். சிறுதெய்வங்கள் தங்களின் வாழ்வைக் காத்து வருவதாகவும், தங்களோடு நேரடித் தொடர்பில் இருப்பதாகவும் நம்பிக்கையை வேளாண் மக்கள் கொண்டிருப்பதைத் தூர்வை நாவல் விளக்குகிறது.

விருந்தோம்பல் பண்புகளும், மனிதர்களை மனிதர்கள் மதிக்கும் உயரிய குணமும் குறைந்து வருகின்ற இக்காலச் சூழலில் பெருமாள், பெரிய கவுண்டர் இருவரின் ஆன்ம உறவுநிலை தூர்வை நாவலில் விளக்கப்பட்டிருக்கும் பக்கங்கள் படிப்போரை வியப்பில் ஆழ்த்துகிறது. உருளைக்குடி கிராமத்திலிருந்து வேளாண் தொழில் செய்யும் சம்சாரிகள் பலர் உழவுக்கு மாடுகள் தேடி வருடந்தோறும் சேலம், தொட்டியம், உப்பரமங்கலம் என்று வெகுதூரம் செல்வது வழக்கம். தூத்துக்குடி மாவட்ட உருளைக்குடி கிராமத்துக்கும் சேலம் மாவட்டத்திற்கும் இருக்கும் தூரம் சற்று அதிகம். மினுத்தான், தன்னாசி, முண்டானி, கோணக்கட்டையன், பப்பன் என உடன் சென்ற எல்லோரும் மாடுகள் வாங்கிவிட்டனர். பெருமாளுக்கு. மாடு வாங்குவதற்காக பெரிய கவுண்டர் வீட்டிற்கு எல்லோரும் வந்து சேர்ந்தனர். மாடுகளும், பெருமாளுக்கு பிடித்துவிட்டது. அட்வான்ஸ் கொடுக்க மடியில் உள்ள பணத்தைத் தொட்டுப்பார்த்தார். பணம் காணவில்லை. சிறுகுழந்தையைப் போல குலுங்கிக் குலுங்கி அழுதார் பெருமாள் பெரிய கவுண்டர் பார்த்துக் கொண்டே நின்றார். இவர்கள் எந்த ஊர் என்று கேட்டுத் தெரிந்து கொள்கிறார். ஆறுதலாகப் பெருமாளை முதுகில் தடவிக் கொடுத்தார். அட்வான்ஸ் கொடுத்த அந்த ஜோடி மாட்டையே அவிழ்த்துக் கயிற்றைப் பெருமாளின் கையில் கொடுத்தார். "கொண்டு போயி நல்லா வெவசாயம் பாரு அடுத்த வருசம் வெள்ளாமை எடுத்திட்டு வரும் போது பணம் கொண்டு வந்து குடு போதும்"

என்று கொடுத்து அனுப்பி வைக்கிறார். ஒரு வேளை மாடுகள் வாங்க முடியாமல் போயிருந்தால் அந்த வருட விவசாயம் செய்திருக்க முடியாது. இன்றைக்கு இருப்பதைப் போல் டிரேக்டர் போன்ற இயந்திர வசதிகள் இல்லாத அந்தக் கால கட்டத்தில் வேளாண்மை என்பது முழுக்க முழுக்க மாடுகள் சார்ந்தே இருந்தது. மாடுகள் அவர்களுடைய வாழ்வோடு இரண்டறக் கலந்த ஜீவனாகவே வாழ்ந்து வரும் எனில் அது மிகையல்ல. மாடுகள் இல்லாது விவசாயம் செய்ய முடியாதே, அவ்வருடம் மண்ணும், மனிதனும் வீணாகிப் போய்விடுமே என்பதைப் பெரிய கவுண்டர் உணர்ந்த காரணத்தினாலேயே ஊர்ப்பெயர் தெரியாத இடத்துக்காரர்களுக்கு கூட உதவுகிற மனப்பாங்கு வேளாண் பெருங்குடி மக்களுக்கு வாய்த்தது. வாய்மை தவறாப்பணியும் இளகிய மனமும் கொண்டவர்களாக வேளாண் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சிறந்த விருந்தோம்பல் பண்பும் கொண்டபவர்களாக இருந்தமையை, "கவுண்டரம்மா சோறு பரிமாற அவர்கள் உரிமையோடு கேட்டு வாங்கி வயிறாறச் சாப்பிட்டார்கள். சாப்பிட்ட இலையை எடுத்தவர்களுடன் கவுண்டரம்மா நான் எடுத்துக் கொள்கிறேன் என்று உரிமையோடு சண்டை போட்டதன் வழி உணர முடிகின்றது.

பெண்களுக்கான முக்கியத்துவமும், ஜாதக நம்பிக்கையில் மினுத்தானின் நிலைப்பாடும், மாடத்தி தன் வயலில் விளைந்த பொருட்களை ஐயருக்கும், பனையேறிக்கும் உரல் குத்தும் பெண்களுக்கும் கொடுக்கும் வள்ளல் தன்மையும், சிறுதெய்வங்களுடனான தொடர்பும், பெருமாள் பெரிய கவுண்டர் உறவு நிலைகளுமெனஇ வேளாண்மை செய்யும் மக்களின் உணர்வு நிலைகள் போன்றவை தூர்வை நாவல்வழி இவ்வாய்வு கட்டுரை எடுத்துக்காட்ட விளைகிறது.

## துணைநூற்பட்டியல்

1. தர்மன்.சோ, தூர்வை, அடையாளம் பதிப்பகம், திருச்சி - 2017
2. தினமலர் நாளிதழ், திருநெல்வேலி பதிப்பு
3. பவானந்தம்பிள்ளை.ச (1925) தமிழ்ச் சொல்லகராதி, சென்னை